# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
# Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons), District Munsif, Arni.
# O.S.74/2016

2026=ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W. 3 தருமன், வயது 53, த/பெ கண்ணன்**

**நேரம் - 12.45**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ல் உள்ள சங்கதிகளில் அறக்கட்டளை நிர்வாகம் ஏற்படுத்தி அதை பதிவு செய்ய வேண்டும் என்பதற்கு ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றி அதன் விவரங்களை பி.வா.சா.ஆ.43ல் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி விவரங்கள் உள்ளதா என்றால் சாட்சி அசல் ஆவணத்தை பார்த்து விட்டு பி.வா.சா.ஆ.43ல் இல்லை என்று கூறினார். பி.வா.சா.ஆ.2 திருத்தல் பத்திரத்தம் தயாரிக்க ஏதேனும் நாங்கள் தீர்மானம் போடப்பட்டு அதன் பின்னிட்டு திருத்தம் செய்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.43ல் மேற்படி திருத்தல் செய்ததற்கான விவரங்கள் இல்லை என்றால் சரிதான், 2016ம் ஆண்டுதான் திருத்தம் செய்தோம்.

2. பி.வா.சா.ஆ.3 ஆன தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் விவரங்களை மேற்படி பி.வா.சா.ஆ.43 ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.43ல் வரிசை எண்கள் 7, 28, 36, 41, 44, 45, 46, 55, 58, 60, 61, 62, 66, 70, 72, 73, 74, 75, 76, 79, 80 ஆகிய வரிசைகளில் கையொப்பமிடாமல் காலியாக உள்ளது என்றாலும் கிட்டத்தட்ட 20க்கும் மேற்பட்டோர் கையொப்பமிடாமல் தீர்மானம் போடப்பட்டது என்றால் கூட்டம் ஆரம்பிக்கும் போது அனைவரும் இருந்தார்கள், அதன் பின்னிட்டு சில வேலைகள் காரணமாக சென்று விட்டதால் கையொப்பம் செய்யாமல் விடுப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.43 ல் உள்ள தேதிப்படி எந்த கூட்டமும் நடைபெறவில்லை, எந்த தீர்மானமும் போடப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, மேற்படி தீர்மானத்தில் வரிசை எண். 18ல் வாதியும்தான் கையொப்பமிட்டார்.

3. மேற்படி கையொப்பம் வாதியுடையது இல்லை என்றாலும், நாங்களே தயாரித்து தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.43 ல் வரிசை எண். 58 சுரேஷ் மற்றும் 76ல் உள்ள ராமமூர்த்தி ஆகியோர் வந்தவாசி தாலுக்கா, நம்பேடு கிராமத்தில் வசித்து வருபவர்கள் என்றாலும், இவ்வூரை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.43 ல் நடைபெற்ற தீர்மானத்தில் மேற்படி நபர்கள் கலந்து கொள்ளவில்லை என்றாலும், சேவூர் கிராமத்தில் இல்லை என்றாலும், அந்த சமயத்தில் நம்பேடு கிராமத்தில்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல, பூர்வீகம் சேவூர்தான். பொதுவாக கூட்டம் கூடுவதற்கு யார் வருகிறார்களோ, அவர்கள் பெயர், கையொப்பம் செய்த பிறகுதான் கூட்டத்தின் உள்ளே அனுமதிப்பார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

4. பி.வா.சா.ஆ.43 ஆவணம் பொய்யான ஆவணம் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.43 அசல் ஆவணம் என் வசம் உள்ள போது அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் அதன் ஒளி நகலை தாக்கல் செய்தது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல, தீர்மானம் பதிவேடு பொதுவான பதிவேடு என்பதால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய இயலவில்லை. ஆகையால் வழக்குப்படி வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 1.05**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni